பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

18 08205 MONDAY 7.15 PM

## தலைப்புச் செய்திகள்

1. ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புட்டின், யுக்ரைன் விவகாரம் தொடர்பாக, இன்று பிரதமர் திரு. நரேந்திர மோடியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

2. சீன வெளியுறவு அமைச்சர் திரு. Wang Yi, வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து புதுதில்லியில் இன்று பேச்சு நடத்தி வருகிறார்.

3. செமிகண்டக்டர் துறையில் வலுவான சூழல் அமைப்பை உருவாக்கும் வகையில் அரசு செயல்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

4. நாட்டில் உள்ள அனைத்து மொழிகளையும் ஊக்குவிக்கும் வகையில், அரசு செயல்பட்டு வருவதாக மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

5. *20* வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் *Amit* மற்றும் *Sumit Malik* அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>><<<<<

ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புட்டின், இன்று பிரதமர் திரு. நரேந்திர மோடியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

அலாஸ்காவில் அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப்-புடன் நடத்திய பேச்சுவார்த்தை குறித்து, ரஷ்ய அதிபர் தம்முடன் உரையாடியதாக பிரதமர் தமது சமூகவலைதளப் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

யுக்ரைன் விவகாரத்தில் அமைதியான தீர்வு ஏற்படுவதையே இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வந்ததாகவும், அதுதொடர்பான முயற்சிகளுக்கு எப்போதும் ஆதரவு அளித்து வருவதாகவும் பிரதமர் அந்தப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பாக ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புட்டினுடன் தொடர்ந்து கருத்து பரிமாற்றம் மேற்கொள்ள தாம் தயாராக இருப்பதாக திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

>>>>><<<<<

சீன வெளியுறவு அமைச்சர் திரு. Wang Yi, வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து புதுதில்லியில் தற்போது பேச்சு நடத்தி வருகிறார்.

இந்த பேச்சுக்களின் போது, இருதரப்பிலும் வெளிப்படையான மற்றும் ஆக்கபூர்வமான அணுகுமுறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் டாக்டர் ஜெய்சங்கர் வலியுறுத்தினார்.

இருதரப்பு உறவை மேம்படுத்தவும், உலகளாவிய பிரச்சினைகள் குறித்த கருத்துக்களை பரிமாறிக் கொள்ளவும் ஒரு வாய்ப்பினை இந்த சந்திப்பு ஏற்படுத்தியிருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

இந்தியா –சீனா எல்லை விவகாரம் தொடர்பாக சிறப்பு பிரதிநிதிகள் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவலுடன் திரு. Wang Yi பேச்சு நடத்தவிருப்பதாக டாக்டர் ஜெய்சங்கர் குறிப்பிட்டார்.

இரண்டு நாள் பயணமாக இந்தியா வந்துள்ள திரு. Wang Yi பிரதமர் திரு. நரேந்திர மோடியை நாளை சந்திக்கவுள்ளார்.

>>>>><<<<<

எதிர்க்கட்சியினரின் அமளி காரணமாக, இன்று நாடாளுமன்ற நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன.

மக்களவை இன்று காலை கூடியபோது, பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பாக விவாதம் நடத்த வேண்டும் என்று கோரி, எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டன.

இதையடுத்து, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், மக்களுக்கான பிரச்சினைகளை எழுப்ப வேண்டும் என்றும், அவை நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்கக்கூடாது என்றும் அவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா வலியுறுத்தினார்.

அதன்பிறகும், அமளி தொடரவே, அவை நண்பகல் 12 மணிவரை ஒத்தி வைக்கப்பட்டது.

மீண்டும் அவை கூடியபோது, வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல். ஜன் விஷ்வாஸ் மசோதாவை அறிமுகப்படுத்தினார்.

பின்னர், இந்த மசோதாவை தேர்வுக் குழுவின் ஒப்புதலுக்கு அனுப்புவதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அடுத்த நாடாளுமன்ற அமர்வின் முதல்நாள் அன்று இதுதொடர்பான அறிக்கையை அந்தக் குழு சமர்ப்பிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, இந்திய கல்வி நிறுவனங்கள் திருத்தமசோதாவை மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் அறிமுகப்படுத்தினார்.

இந்திய கல்வி நிறுவனங்கள் சட்டம் 2017-ல் திருத்தம் மேற்கொள்ள இந்த மசோதா வகை செய்கிறது.

இந்த மசோதாக்களை அறிமுகம் செய்த போது. பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பாக எதிர்க்கட்சியினர் தொடர்ந்து கோஷமிட்டனர்.

இதையடுத்து. அவை பிற்பகல் 2 மணிவரை ஒத்தி வைக்கப்பட்டது.

இரண்டு மணிக்கு அவை கூடிய நிலையில், விண்வெளிப் பயணம் மேற்கொண்ட சுபான்ஷு சுக்லாவிற்கு மக்களவையில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து, எதிர்க்கட்சியினர் அமளியில் ஈடுபட்டதன் காரணமாக, நாள் முழுவதும் அவை ஒத்தி வைக்கப்பட்டது.

மாநிலங்களவை இன்று காலை கூடிய போது, நாகாலாந்து ஆளுநர் இல. கணேசன் மறைவுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதையடுத்து. பல்வேறு அரசியல் கட்சிகள் 19 ஒத்திவைப்பு தீர்மானங்களை வழங்கியிருப்பதாகவும், அவை அனைத்தையும் நிராகரிப்பதாகவும் அவைத் துணைத்தலைவர் திரு. ஹரிவன்ஸ் தெரிவித்தார்.

கேள்வி நேரத்திற்கு பிறகான விவாத நேரத்தில், பொதுமக்கள் பிரச்சினைகள் தொடர்பான விவாதங்களை மேற்கொள்ள வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

அப்போது பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பாக விவாதம் நடத்த வேண்டும் என்று கோரி, எதிர்க்கட்சியினர் அமளியில் ஈடுபட்டனர். இதனையடுத்து. பிற்பகல் 2 மணிவரை அவை ஒத்தி வைக்கப்பட்டது.

மீண்டும் அவை கூடியபோது, மத்திய கப்பல் போக்குவரத்து மற்றும் துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால், துறைமுகங்கள் மசோதாவை அறிமுகம் செய்தார்.

ஒருங்கிணைந்த துறைமுக மேம்பாட்டை ஊக்குவிக்கும் வகையில், இந்த மசோதா அறிமுகப்படுத்தப்படுவதாக அவர் தெரிவித்தார்.

இந்த மசோதா தொடர்பான விவாதத்திற்கு பதிலளித்துப் பேசிய அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால், பல்வேறு கடலோர மாநிலங்கள் மற்றும் துறைமுகம் சார்ந்த நிறுவனங்களுடன் மேற்கொள்ளப்பட்ட தீவிர ஆலோசனைக்குப் பிறகு இந்த மசோதா கொண்டு வரப்பட்டதாக தெரிவித்தார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமையின் கீழ், கடல்சார் துறையில் முன்னணி நாடுகளில் ஒன்றாக இந்தியா விரைவில் திகழும் என்று அமைச்சர் கூறினார்.

இதனைத் தொடர்ந்து, மாநிலங்களவையில் இம்மசோதா நிறைவேற்றப்பட்டது.

பின்னர் அவை நாள் முழுவதும் ஒத்தி வைக்கப்பட்டது.

>>>>><<<<<

செமிகண்டக்டர் துறையில் வலுவான சூழல் அமைப்பை உருவாக்கும் வகையில் அரசு செயல்பட்டு வருவதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமையின் கீழ், மின்னணு பொருட்கள் உற்பத்தி மற்றும் வடிவமைப்பில், நாடு வேகமான முன்னேற்றத்தை கண்டு வருவதாக கூறினார்.

செமிகண்டக்ர் துறையை ஊக்குவிக்கும் வகையில், மின்னணு அமைப்பு, வடிவமைப்பு மற்றும் உற்பத்தி செமிகண்டக்டர் மிஷன் உட்பட பல்வேறு முன்னெடுப்புகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

2030ஆம் ஆண்டில், இத்துறையில் 110 பில்லியன் டாலர் வளர்ச்சியை நாடு எட்டும் என்று திரு. ஜெ.பி. நட்டா நம்பிக்கை தெரிவித்தார்.

>>>>><<<<<

நாட்டில் உள்ள அனைத்து மொழிகளையும் ஊக்குவிக்கும் வகையில், அரசு செயல்பட்டு வருவதாக மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று மொழிகள் வளர்ச்சி தொடர்பான கேள்விக்கு பதிலளித்த அவர், பல மொழிகள் கற்பதை ஊக்குவிக்கும் வகையில் தேசிய கல்விக் கொள்கை வடிவமைக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருவதாக கூறினார்.

கடந்த நிதியாண்டில் மொழிகள் வளர்ச்சிக்காக 308 கோடியே 44 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்திய மொழிகள் மேம்பாட்டு மானியத்தின் கீழ், கடந்த பத்தாண்டுகளில் ஒதுக்கப்பட்ட நிதி தொடர்பான விவரங்களை சமர்ப்பித்த அமைச்சர், மொழிகள் அடிப்படையில் இல்லாமல், தேவை மற்றும் பயன்பாட்டிற்கேற்ப இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதாக தெரிவித்தார்.

>>>>><<<<<

கடந்த இரண்டு நிதியாண்டுகளில் போலியாக சரக்கு மற்றும் சேவை வரி பதிவுகளை மேற்கொண்ட 117 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக மத்திய நிதித்துறை இணையமைச்சர் திரு. பங்கஜ் சௌத்ரி தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்துபூர்வமாக அளித்த பதிலில் இதனை தெரிவித்துள்ள அவர், போலி பதிவுகள் மூலமாக கடந்த நிதியாண்டில் 3 ஆயிரத்து 977 நிறுவனங்கள் மற்றும் 13 ஆயிரத்து 109 கோடி ரூபாய் கண்டறியப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

திருட்டு மற்றும் மோசடி மூலமாக பெறப்பட்ட ஆதார் மற்றும் PAN எண்களை பயன்படுத்தி, இந்தப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டது கண்டறியப்பட்டுள்ளதாக தமது பதிலில் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

பழங்குடியின சமூகத்தினரின் கலாச்சாரம், பாரம்பரியம் மற்றும் வாழ்க்கை முறை தொடர்பான ஈடு இணையற்ற தகவல்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

பழங்குடியின மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், பல்வேறு மாநிலங்களில் செயல்பட்டு வரும் பழங்குடியின பிரதிநிதிகளை புதுதில்லியில் அவர் சந்தித்து பேசினார்.

இதுதொடர்பாக குடியரசுத் தலைவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் பழங்குடியின சமூகத்தினர் முக்கிய பங்களிப்பை வழங்க முடியும் என்று கூறியுள்ளார்.

>>>>><<<<<

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி Bhushan Ramkrishna Gavai இன்று குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்முவை சந்தித்து பேசினார்.

குடியரசுத்தலைவர் மாளிகையில் நடைபெற்ற இந்த சந்திப்பின்போது, பல்வேறு அம்சங்கள் குறித்து விவாதித்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

>>>>><<<<<

*20* வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் *Amit* மற்றும் *Sumit Malik* அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

பல்கேரியாவின் *Samokov*-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் *79* கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் *Amit* கஜகஸ்தானின் *Yerkhan Abil*-ஐ வென்றார்.

*57* கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் *Sumit Malik,* அஜர்பைஜானின் *Vasif Baghirov*-யை வென்றார்.

>>>>><<<<<

*Europe Smash Table Tennis* போட்டியில் இந்தியாவின் *Manav Thakkar* இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**ஸ்வீடனில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர்,** *12-10, 11-5, 5-11, 11-9* **என்ற செட்கணக்கில் ஜப்பானின்** *Hiroto Shinozuka*-**வை வென்றார்.**

**மகளிர் ஒற்றையர் பிரிவில் முதல் சுற்று ஆட்டத்தில் ஸ்ரீஜா அகுலா,** *5-11, 11-9, 15-13, 10-12, 11-8* **என்ற செட்கணக்கில் இந்தியாவின் மனிக்கா பத்ராவை வென்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.**

**>>>>><<<<<**

**பெரு பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியா இரண்டு தங்கம், ஒரு வெள்ளி. நான்கு வெண்கலப்பதக்கங்களை வென்றது.**

**>>>>><<<<<**

*Winston Salem* **ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின்** *D.K.* **சுரேஷ் பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.**

**>>>>><<<<<**

**ஆசிய துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம். இரண்டு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.**

**>>>>><<<<<**